Kampong Kapor Methodist Church
(Bishop Bickley Memorial)

## *2025 ஆம் ஆண்டு வருகைக் கால -கிறிஸ்துமஸ் கடிதம்*



*தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்.*
*மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்;*
*அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்.*
*-ஏசாயா 35:3-4-*

*29 நவம்பர் 2025*

*அன்பார்ந்த சபையாரே மற்றும், தேவனுடைய ராஜ்யத்தின் தூதுவர்களே,*

*2025 ஆம் ஆண்டின் **வருகைக் காலம் (Advent)**நவம்பர் 30 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 25 ஆம் தேதி கிறிஸ்துமஸ் வரை நீடிக்கிறது.*
*அட்வென்ட் (Advent) என்பது லத்தீன் வார்த்தையான அட்வென்துஸ் என்னும் வார்த்தையிலிருந்து வந்தது, இதன் பொருள் "வருதல்" அல்லது "வருகை".*
*திருவருகைக் காலம் என்பது கிறிஸ்துவின் **வருகைக்காகத் தயாராகும்** ஒரு காலமாகும்- கிறிஸ்துவின் முதல் வருகையை (நாம் கிறிஸ்துமஸ் தினத்தில் கொண்டாடுகிறோம்) பின்னிட்டுப் பார்த்து கொண்டாடுவதும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை வரவேற்க ஆவலுடன் எதிர்பார்ப்பதும் ஆகும்.*
*இயேசு கிறிஸ்து மாம்சத்தில் இந்த உலகத்தில் பிறந்து, மறித்து, உயிர்த்தெழுந்தது போலவே, கிறிஸ்து நிச்சயமாக மீண்டும் வருவார் என்பதற்கு திருச்சபை சாட்சியமளிக்கும் வழிகளில் ஒன்று திருவருகைக் காலம்-கிறிஸ்துமஸ் பருவங்கள் என்பதாகும்.*

*கிறிஸ்துவின் வருகைக்காக நாம் எவ்வளவு ஏங்குகிறோம்! இந்தக் கடிதத்தை எழுதும் நேரத்தில், உக்ரைன், மியான்மர் மற்றும் உலகின் பிற பகுதிகளில் போர்களும் உள்நாட்டுப் போர்களும் தொடர்கின்றன.*
*காசாவிற்கு போர் நிறுத்த ஒப்பந்தம் நடந்திருந்தாலும், அமைதிக்கான வழி மற்றும் குடும்பங்களும் வீடுகள் மற்றும் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவது இன்னும் கடினமாகவும், நிச்சயமற்றதாகவும் உள்ளது, மேலும் காசா மக்கள் போதுமான உதவிகள் அவர்களைச் சென்றடையாததால் தொடர்ந்து பஞ்சத்தால் அவதிப்படுகிறார்கள்.*
*கடல் மட்ட உயர்வு மற்றும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணமாக தாழ்வான தீவு நாடுகளில் உள்ள மக்கள் நிலம், வீடுகள் மற்றும் தொழில்களை இழந்து தவித்து வருகின்றனர்.*
*நம் அருகிலும், இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன; சில பெரியவர்கள் வேலையில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்;*
*இழப்புகள், ஒரு தீவிரமான நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், அல்லது அன்றாடத் தேவைகளுக்காகப் போராடி வருகின்றனர். சிங்கப்பூரில் கூட, பலர் வறுமையிலும் தனிமையிலும் வாழ்கின்றனர். பாவத்தால் பாதிக்கப்பட்ட உலகம், கடவுள் ஆரம்பத்தில் கூறிய நன்மையிலிருந்து வெகு தொலைவில் சென்றுவிட்டது.*


*பாவம் நிறைந்த சபிக்கப்பட்ட உலகிற்குத்தான் கடவுள் தம்முடைய குமாரனை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்துவாக அனுப்பினார், மேலும் அவருக்கு "இயேசு என்று, பேரிடப்படுவார்; ஏனென்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்." மத்தேயு 1:21*
*இயேசு தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்து, ஜனங்களை மனந்திரும்புதல் மற்றும் மன்னிப்பை பெற அழைத்தார், ஜனங்களிடையே உள்ள ஒவ்வொரு வியாதியையும் குணப்படுத்தினார், வெறுக்கப்பட்டவர்களுக்கு கண்ணியத்தை மீட்டெடுத்தார், பசித்தவர்களுக்கு உணவளித்தார், கடலின் புயலை அடக்கினார், நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையையும் ஆதரவற்றவர்களுக்கு உதவியையும் அளித்தார். இயேசு தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம், உலகத்தின் இரட்சிப்புக்காக மீட்கும்பொருளை முழுமையாகச் செலுத்தி, பாவம் மற்றும் மரணத்தின் மீது கடவுளின் வல்லமையைக் காட்டி, எல்லாவற்றையும் புதிதாக்கி, புதியதை உருவாக்கினார். இயேசு தனது முதல் வருகையில் செய்ய வந்த இரட்சிப்பின் வேலை, அவர் இரண்டாவது முறையாக வரும்போது அதன் முழு நிறைவைக் காணும். அந்த நாளில், பாவத்தின் சாபம் இனி இருக்காது, துன்மார்க்கர் நுழையாத ஒரு புதிய வானமும் பூமியும் இருக்கும் - அநீதி, வன்முறை மற்றும் போர்கள் இனி இல்லை; மரணமோ துக்கமோ அழுகையோ வலியோ இருக்காது; நீதி, அமைதி, மகிழ்ச்சி, அழகு, பாதுகாப்பு மற்றும் செழிப்பு நிறைந்த உலகமாக இருக்கும். கிறிஸ்துவின் வருகைக்காக நாம் எவ்வளவு ஏங்குகிறோம்!*

*அந்நாள் வரும் வரை (கிறிஸ்துவின் இரண்டாம் வருகை), இரட்சிப்பு தேவைப்படும் உலகிற்கு கிறிஸ்துவின் ஈவின் ஒளியை சுமப்பவர்களாக நாம் இருப்போமாக. நம்பிக்கை, மற்றும் அன்பு கொண்ட ஜனங்களாக, நம்பிக்கையும் உதவியும் தேவைப்படுபவர்களை நினைவில் வைத்து, அவர்களின் இருளில் கிறிஸ்துவின் ஒளியைப் பிரகாசிக்கச் செய்து, அவர்களுக்கு நம்பிக்கையையும் உதவியையும், ஜெபங்களையும், நமது வார்த்தைகள் மற்றும்–செயல்களால் காட்டுவோம்.*


*இந்த வருகைக் கால கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில், மகிழ்ச்சியானவர்களுக்கு மட்டுமல்ல, துக்கப்படுபவர்களுக்கும் இடமளிப்போம், கிறிஸ்துவுக்கும் இடமளிப்போம். இந்தக் கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆராதனைகளிலும், ஐக்கியத்திலும் , காணிக்கைகள் மற்றும் சேவைக்கான வாய்ப்புகளின் மூலம், அட்வென்ட் கிறிஸ்துமஸில் கடவுளின் குடும்பமாக நாம் ஒன்றாகச் செயல்படுவோம்.*

*கடவுள் வாக்குதத்தம் அளித்தபடி, தேவன் தமது குமாரனாகிய இயேசுவை உலகிற்கு அனுப்பினார், மேலும்* ***அவர் மீண்டும் வந்து இரட்சிப்பார்*** *என்பதை மற்றவர்கள் அறிய உதவுவோம், கிறிஸ்துவின் வருகைக்காக ஆவலுடனும் ஆயத்தத்துடனும் நாம் ஒன்றாக இருப்போம்.*


*கர்த்தராகிய இயேசுவே, வாரும்!*



*மறைதிரு.*
*போ சு ஹூய்*
*தலைமை போதகர்*
*Rev Poh Zhi-Hui*
*Pastor-in-Charge*



*மறைதிரு. ஆண்டணி*
*புவா*
*போதகர்*
*Rev Anthony Phua*
*Pastor*



*மறைதிரு. அழகேசன் மோசஸ்*
*தமிழ் போதகர்*
*Rev Alegesan Moses*
*Tamil Ministry Pastor*

***கம்போங் கபூர் மெதடிஸ்ட் தேவாலயத்தில் சந்திப்போம்!***
***வாருங்கள், ஆசீர்பெறுங்கள்!!!***
*அனைத்து கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மற்றும் ஆராதனை விவரங்களை அறிந்துகொள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்*

| | | |
|---|---|---|
| ***07.12.2025 ஞாயிற்றுக்கிழமை*** | ***கிறிஸ்மஸ் கீத ஆராதனை*** | *மாலை 05.30 மணிமுதல் 07.30 மணி வரை* |
| ***14.12.25 ஞாயிற்றுக்கிழமை*** | ***தமிழ் ஆராதனை*** | *மாலை 05.30 மணிமுதல் 07.30 மணி வரை* |
| ***21.12.2025 ஞாயிற்றுக்கிழமை*** | ***குடும்ப கிறிஸ்மஸ் ஆராதனை*** | *மாலை 05.30 மணிமுதல் 07.30 மணி வரை* |
| ***24.12.2025 புதன்கிழமை*** | ***கிறிஸ்மஸ் முன் தின ஆராதனை*** | *இரவு 07.00 மணிமுதல் 08.30 மணி வரை* |
| ***25.12.2025 வியாழக்கிழமை*** | ***கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்ச்சி*** | *மதியம் 12:15 மணிமுதல் 02:00 மணிவரை* |
| ***31.12.2025 புதன்கிழமை*** | ***வருட இறுதி ஆராதனை*** | *இரவு 07.00 மணிமுதல் 08.30 மணி வரை* |